22nd March 1963]

(b) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்தப் பாலமானது மிகவும் குறுகலாக இருப்பதினாலும், பாலத்தின் மீது நாள் தோறும் ஆயிரக்கணக்கான பஸ்கள், லாரிகள் போவதால் இதை அகலப் படுத்துவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: போக்குவரத்து வசதியைப் பொறுத்து எல்லாக் குறுகிய பாலங்களையும் அகலப்படுத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமும், திட்டமும் கூட. நிதி வசதிக்குத் தகுந்த முறையிலே எதை உடனே செய்யவேண்டும், எதைக் கொஞ்சம் தாமதம் செய்து செய்ய வேண்டும் என்ற முறையில் பல முடிவுகள் எடுக்கிறோம். இந்தத் திட்டம் இப்பொழுது எடுப்பதாக இல்லை.

* 336 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to widen and straighten the narrow bridge near Thoppur village on the Banares-Cape Comorin road; and

(b) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

Municipalities (Accounting system)

* 337 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to place on the Table of the House the list of the Municipalities in which accounts were found to be unsatisfactory during audit for the years 1958–59 and 1959–60; and the steps taken for improving the accounting system in the future?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 1958-59, 1959-60-ம் ஆண்டுகளில் தணிக்கை செய்தபொழுது கணக்குகளைத் திருப்திகரமாக வைத்து வரவில்லையென்று தெரிந்த முனிஸிபாலிடிகளின் பட்டியல் ஒன்று [a] பையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி முனிசிபாலிடிகளில் தற்பொழுது இருந்துவரும் கணக்கு முறைகளில் குறைபாடு எதுவும் இல்லை. ஆனால், அவை கணக்குகளை வைத்து வருவதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றத் தவறுவதனால்தான் குறைபாடுகள் எழுகின்றன. தணிக்கை ஆட்சேபணைகள், உதவிப் பரிசோதகரின் குறிப்புகள் ஆகியவற்றின் மூலம் கணக்குகளில் உள்ள குறைபாடுகளைக் கவனித்து அவை நீக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய குறைபாடுகள் மறுபடியும் ஏற்படாதபடி தகுந்த உத்தரவுகளும் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்றன.

---

[a] Printed as Appendix on pages 295-296